# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 48 — 1973 පෙබරවාරි 23 වැනි සිකුරාදා — 1973.02.23

48 ம் இலக்கம் — 1973 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ம் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (III)—வியாபார உரிமை அடையாளங்களும் ஆக்க உரிமை விளம்பரங்களும்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் .. | 33 | அலங்காரச் சித்திரச்சட்ட விளம்பரங்கள் .. | |
| வியாபார உரிமை அடையாள அறிவிப்பு .. | 35 | வடிவ அமைப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் .. | — |
| ஆக்க உரிமைக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் .. | — | பலவிதமானவை .. .. | — |


*குறிப்பு.—இலங்கைத் தேசியப் பசிப்பிணி ஒளிப்பியக்க சட்டமூலமும் நிதி, இலங்கை அரச ஈட்டு வங்கி (திருத்தம்) சட்டமூலமும் 1973 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ந் திகதிய ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II ற்கு குறை நிரப்பிகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.*

## வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள்

### வியாபார உரிமை அடையாள அலுவலகம்

**வியாபார உரிமை அடையாளம் சம்பந்தமான சகல கடிதங்களும் வியாபார உரிமை அடையாளப் பகுதிப் பதிவாளர், கம்பெனிகள் பதிவாளர் அலுவலகம், கட்டடம் 5, எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.**

### பரிசோதனைக்குரிய நேரம்

**அரசாங்க விடுமுறை தவிர்ந்த ஒவ்வொரு கிழமை நாட்களிலும் 10 மணி தொடக்கம் 4 மணிவரையிலும், சனிக்கிழமைகளில் 10 மணி தொடக்கம் 1 மணிவரையிலும் அலுவலகம் பொதுசனங்களின் அலுவலுக்குத் திறந்திருக்கும்.**

**எனினும், பரிசோதனைக்குரிய விண்ணப்பப்பத்திரங்கள் கிழமை நாட்களில் மாலை 3 மணிவரையிலும், சனிக்கிழமைகளில் மத்தியானம் 12 மணி வரையிலும் ஏற்றுக் கொள்ளப்படும்.**

### நிறங்களில் வரையறுக்கும் வியாபார உரிமை அடையாளங்கள்

**ஒரு வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யப்படும் பொழுது, அது குறிப்பிட்ட நிறங்களுக்கு வரையறுக்கப்பட்டதென்று விண்ணப்பப் பிரசுரத்தில் குறிப்பிட்டிருந்தால் அந்த நிறங்கள் கூடுமானவரை வழக்கமான கட்டியம் சார்ந்த முறையில் இத்துடனுள்ள அடையாளச் சின்னத்தில் காட்டப்படும்.**

### கூட்டுச் சேர்க்கை

**150 ம் அதிகார வியாபார அடையாளச் சட்டத்தின் 23 ம் பகுதியின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒரு அடையாளம் இன்னொரு வியாபார அடையாளத்துடன் கூட்டுச் சேர்க்கப் படவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தால், அது அதன் உத்தியோக எண்ணினால் காட்டப்படும்.**

### " அ " அல்லது " ஆ " பகுதியின் கீழ் விண்ணப்பம்

**பதிவேட்டின் " அ " பகுதியின் கீழ் வரும் விண்ணப்பங்கள் வேறு யாதும் எழுத்தின்றி உத்தியோக எண் மூலமாகவே காட்டப்படும். பதிவேட்டின் " ஆ " பகுதியின் கீழ்வரும் விண்ணப்பங்கள் உத்தியோக எண்ணுக்கு முன் " ஆ " என்ற எழுத்தால் தெளிவாகக் காட்டப்படும்.**

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**
**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

*எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.*

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு மே மீ 5 ந் உ.

---

## எதிர்ப்பு

**பின்வரும் வியாபார அடையாளங்கள் பதிவு செய்வதை யாராயினும் எதிர்க்கக் காரணங்கள் இருந்தால் இந்த வர்த்தகப் பத்திரிகைத் தேதியிலிருந்து இரு மாதங்களுக்குள் அழிக்கப்படாத அல்லது படிவு செய்த 25 ரூபா பெறுமதியான முத்திரையுடன் ரீ. எம். 7 பத்திரத்தில் எதிர்ப்பு அறிவித்தலைச் சமர்ப்பிக்க வேண்டும். பதிவாளர் தகுதியானதெனக் கருதினால், அவர் விதிக்கும் நிபந்தனைகளுடன் எதிர்ப்புத் தெரிவிக்கும் கால எல்லை நீடிக்கப்படலாம். பதிவு கோரும் விண்ணப்பகாரர் தனது விண்ணப்பத்தை மீளப்பெறுவதற்குச் சந்தர்ப்பத்தை அளிக்கும் மூகமாக, முறைப்படியான அறிவித்தல் எதிர்ப்பு விண்ணப்பம் தயாரிப்பதற்கு வேண்டிய செலவைச் செய்யுமுன், அவருக்குக் கடிதமூலம் நியாயமான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். எதிர்ப்பவர் அத்தகைய அறிவித்தலைக் கொடுக்கத் தவறின், விண்ணப்பகாரர் எதிர்ப்பை எதிர்த்து வாதிடாதவிடத்து, எதிர்ப்பவரின் செலவு கோரும் மனு பரிசீலனை செய்யப்படும்போது அது கவனத்துக்கெடுக்கப்படும்.**

---

1. வியாபாரச்சின்னம் இல. : 31,621. (2) பெற்ற திகதி : 1969 ம் வருடம் ஜூன் மாதம் 29 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : எவ். ஹொவ்மன்-லாரேச் அன்ட் கோ. லிமிட்டட் கம்பெனி, சுவிற்சலந்து சட்டங்களின் கீழ் நிறுவப்பட்டதோர் கம்பெனி, ப்பால், சுவிற்சலந்து ; உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின், அது : திருவாளர்கள் ஜூலியஸ் அன்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு, (5) வகுப்பு : 3. (6) வியாபாரச் சரக்கு : ஔடதங்களிலும் மருந்துப்பாகசாலைகளிலும் உபயோகிப்பதற்குத் தயாரிக்கப்பட்ட இரசாயனப்பதார்த்தங்கள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**RETIFON**

இவ்வியாபார உரிமை அடையாளம் வியாபார உரிமை அடையாள இல. 30,627 உடன் இணைக்கப்படவிருக்கிறது.

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1972 ம் ௵ செப்டெம்பர் ௴ 25 ம் உ.

2–970/1—23.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

---

1. வியாபாரச்சின்னம் இல. : 33,073. (2) பெற்ற திகதி : 1970 ம் வருடம் ஒக்டோபர் மாதம் 9 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : ஜே. எல். மொறிசன், சன் அன்டு ஜோன்ஸ் (சிலோன்) லிமிட்டட், (1938 ம் ஆண்டின் 51 ம் இலக்க இலங்கைக் கம்பெனிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டதோர் கம்பெனி) அளுத் மாவத்த வீதி, கொழும்பு 15 ; உற்பத்தியாளர்களும் வணிகர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின், அது : திருவாளர்கள் ஜூலியஸ் அன்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு ; 3. (6) வியாபாரச்சரக்கு : மூன்றும் வகுப்பினுள்ளடங்கிய சகல பண்டங்களும் (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**MORITET**

இவ்வியாபார உரிமை அடையாளம் வியாபார உரிமை அடையாள இலக்கங்கள் 33,070, 33,072 பதிவு செய்யப்படுமிடத்து அத்தருணம் அவற்றுடன் இணைக்கப்படவிருக்கிறது.

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1972 ம் ௵ செப்டெம்பர் ௴ 19 ம் உ.

2–970/2—23.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

---

1. வியாபாரச்சின்னம் இல. : 32,325. (2) பெற்ற திகதி : 1970 ம் வருடம் ஜனவரி மாதம் 25 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : பிறிஸ்டல்-மயர்ஸ் கம்பெனி, (டெலவரே இராச்சியத்தில் இணைக்கப்பட்டது) இல. 345, பாக் அவெனியு, நியுயோர்க், நியுயோர்க் 10022, அமெரிக்க ஐக்கிய இராச்சியங்கள் என்ற முகவரியில் அலுவலகத்தைக் கொண்டது ; உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின், அது : திருவாளர்கள் ஜூலியஸ் அன்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு :3. (6) வியாபாரச்சரக்கு : மருந்துப் பாகசாலையாக்கத் தயாரிப்புக்கள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**VERSURIN**

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1972 ம் ௵ செப்டெம்பர் ௴ 2 ம் உ.

2–970/3—23.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

---

1. வியாபாரச்சின்னம் இல. : 31,575. (2) பெற்ற திகதி : 1969ம் வருடம் ஜூன் மாதம் 20 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : ஃபயிஸர் இங்., டிலவெயார் இராச்சியத்தைச் சேர்ந்ததோர் கூட்டுத்தாபனம், இல. 11, பாட்லட் வீதி, புறூக்லின், நியுயோர்க், அமெரிக்க ஐக்கிய இராச்சியங்கள் என்ற முகவரியில் அலுவலகத்தைக் கொண்டது ; உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின், அது : திருவாளர்கள் ஜூலியஸ் அன்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 3. (6) வியாபாரச் சரக்கு : 3 ம் வகுப்பினுள்ளடங்கிய சகல பண்டங்களும். (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :

**FASIGYN**

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1972 ம் ௵ ஒக்டோபர் ௴ 20 ம் உ.

2–970/4—23.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

---

1. வியாபாரச்சின்னம் இல. : 32,101. (2) பெற்ற திகதி : 1969 ம் வருடம் நொவெம்பர் மாதம் 13 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : அமெரிக்கன் ஹோம் பிறடக்ஸ் கோர்ப்பரேஷன், டிலவெயார் இராச்சியத்தைச் சேர்ந்ததோர் கூட்டுத்தாபனம், அமெரிக்க ஐக்கிய இராச்சியங்கள், இல. 685, மூன்றாவது அவெனியு, நியுயோர்க், நியுயோர்க் 10017, அமெரிக்க ஐக்கிய இராச்சியங்கள் என்ற முகவரியில் நிறுவப்பட்டு வியாபாரம் நடத்தி வருகிறது ; உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது ; திருவாளர்கள் ஜூலியஸ் அன்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 3. (6) வியாபாரச்சரக்கு : ஔடத மருந்துப்பாகசாலையாக்கத் தயாரிப்புக்கள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**OMNIPEN**

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1972 ம் ௵ ஒக்டோபர் ௴ 24 ம் உ.

2–970/5—23.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

## வியாபார உரிமை அடையாள அறிவிப்பு

### பிழை திருத்தம்

1972 ம் வருடம் டிசெம்பர் மாதம் 8 ம் திகதியிடப்பட்ட 37 ம் இலக்கத்தை உடைய ஸ்ரீ லங்கா குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட, 1971 ம் வருடம் மே மாதம் 4 ம் திகதியிடப்பட்ட 41 ம் வகுப்பைச் சேர்ந்த வியாபார உரிமை அடையாள இலக்கம் 33,519 சம்பந்தமான 3 வது விடயம் பின்வருமாறு பிழைதிருத்தஞ் செய்துவாசிக்கப்படல் வேண்டும் :

" இலந்தாரிகே சைமன் ஜினசேன, கலாஞ்சி தேவகே பேட்றிஸ் குலசிங்ஹ, இலந்தாரிகே அசோகா அரியவங்ச ஜினசேன அன்ட் இலந்தாரிகே சுனில் விஜேரத்ன ஜினசேன. "

கம்பெனிகள் பதிவாளர் திணைக்களம்,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு ஜனவரி மீ 26 ந் உ.

ஆர். எல். த சில்வா,
வியாபாரச் சின்னப் பதிவாளர்.

2-982—23.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

முக்கிய கவனிப்பு.—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| சனவரி | .. | 5. 1.73 | வெள்ளி | .. | 29.12.72 | வெள்ளி | .. | ந. ப. 12.00 |
| | | 12. 1.73 | வெள்ளி | .. | 5. 1.73 | வெள்ளி | .. | ந. ப. 12.00 |
| | | 19. 1.73 | வெள்ளி | .. | 12. 1.73 | வெள்ளி | .. | ந. ப. 12.00 |
| | | 26. 1.73 | வெள்ளி | .. | 19. 1.73 | வெள்ளி | .. | ந. ப. 12.00 |
| பெப்புருவரி | .. | 2. 2.73 | வெள்ளி | .. | 26. 1.73 | வெள்ளி | .. | ந. ப. 12.00 |
| | | 9. 2.73 | வெள்ளி | .. | 2. 2.73 | வெள்ளி | .. | ந. ப. 12.00 |
| | | 15. 2.73 | வியாழன் | .. | 9. 2.73 | வெள்ளி | .. | ந. ப. 12.00 |
| | | 23. 2.73 | வெள்ளி | .. | 15. 2.73 | வியாழன் | .. | ந. ப. 12.00 |
| மார்ச் | .. | 2. 3.73 | வெள்ளி | .. | 23. 2.73 | வெள்ளி | .. | ந. ப. 12.00 |
| | | 9. 3.73 | வெள்ளி | .. | 2. 3.73 | வெள்ளி | .. | ந. ப. 12.00 |
| | | 16. 3.73 | வெள்ளி | .. | 9. 3.73 | வெள்ளி | .. | ந. ப. 12.00 |
| | | 23. 3.73 | வெள்ளி | .. | 16. 3.73 | வெள்ளி | .. | ந. ப. 12.00 |
| | | 30. 3.73 | வெள்ளி | .. | 23. 3.73 | வெள்ளி | .. | ந. ப. 12.00 |
| ஏப்றல் | .. | 6. 4.73 | வெள்ளி | .. | 30. 3.73 | வெள்ளி | .. | ந. ப. 12.00 |
| | | 11. 4.73 | புதன் | .. | 6. 4.73 | வெள்ளி | .. | ந. ப. 12.00 |
| | | 19. 4.73 | வியாழன் | .. | 11. 4.73 | புதன் | .. | ந. ப. 12.00 |
| | | 27. 4.73 | வெள்ளி | .. | 19. 4.73 | வியாழன் | .. | ந. ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண் ஒகத்து மீ 18 ந் வ.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.